DINAMANI, PG.NO 2

செவ்வாய்க்கிழமை, 6 மே 2025

# தி.சு.அவினாசிலிங்கத்தின் 122-ஆவது பிறந்த நாள் விழா

## மகாராஷ்டிர ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்பு



தி.சு.அவினாசிலிங்கத்தின் பிறந்த நாளையொட்டி அவினாசிலிங்கம் மனையியல் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகிறார் மகாராஷ்டிர மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன்.

கோவை, மே 5: அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் சார்பில் தி.சு.அவினாசிலிங்கத்தின் 122-ஆவது பிறந்த நாள் விழா திங்கள்கிழமை அனுசரிக்கப்பட்டது.

பத்மபூஷண் விருதாளரான தி.சு.அவினாசிலிங்கத்தின் 122-ஆவது பிறந்த நாள் விழா அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் உயர் தொழில்நுட்பக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் மற்றும் நிறுவனத்தின் வேந்தர் டி.எஸ்.கே. மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மகாராஷ்டிர மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

அப்போது அவர் பேசுகையில், தி.சு.அவினாசிலிங்கத்தின் வாழ்க்கை, லட்சியங்கள் மற்றும் மேன்மையான மரபு ஆகியவை குறித்தும், மகளிர் கல்விக்கான ஒரு நிறுவனத்தை நிறுவுவது என்பது ஒரு தொலைதூரக் கனவாக இருந்த காலகட்டத்தில், அவரது முன்னோடி தொலைநோக்குப் பார்வை குறித்தும் விவரித்தார்.

முன்னதாக, நிறுவனத்தின் துணைவேந்தர் வி. பாரதி ஹரிசங்கர் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் நிர்வாக துணை அறங்காவலர் கௌரி ராமகிருஷ்ணா உள்ளிட்ட அனைத்து அறங்காவலர் குழு உறுப்பினர்கள், நிறுவனத்தின் ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவியர் கலந்து கொண்டனர்.